# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 புரட்டாதி 25 புதன்கிழமை (11-10-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:250


## வாக்கு எண்ணும் பணி யாழ்.செயலகத்திலேயே!

### இடம் மாற்றும் திட்டம் கைவிடப்பட்டது

யாழ்ப்பாணம்,ஒக்.11

யாழ். செயலகம் அமைந்துள்ள பகுதியில் நேற்றுப் பகல் வேளை பதற்றநிலை நிலவிய போதும் வாக்குகளை எண்ணும்பணி யாழ்.செயலகத்திலேயே நடைபெற்று வருகிறது.

நேற்றுக்காலை செயலகம் அமைந்துள்ள சூழலில் ஷெல்கள் வீழ்ந்ததை அடுத்து அப்பகுதிகளில் பதற்ற நிலை ஏற்பட்டது. இதனையடுத்து யாழ்.தேர்தல் மாவட்ட வாக்குகளை எண்ணும் நிலையத்தைஇடம் மாற்ற முன் ஏற்பாடுகள்செய்யப்பட்டன.

இதற்கென யாழ்.இந்துக்கல்லூரியில் தேவையான ஏற்பாடுகளை

(8ஆம் பக்கம் பார்க்க)

## தெற்கில் பதற்றமான சூழ்நிலை நேற்று மட்டும் 300 வன்செயல்கள்

கொழும்பு,ஒக்.11

தெற்கில் இடம்பெற்ற தேர்தல் வன்செயல்கள் காரணமாகப் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

தெற்கில் நேற்று மட்டும் முந்நூறு வன்செயல் சம்பவங்கள் இடம்பெற்றன என்றும் -

அவற்றில் நூறு சம்பவங்கள் கண்டியில் இடம்பெற்றன என்றும்- தேர்தல் செயலகம் தெரிவித்தது. கண்டியில் நேற்றிரவு பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது. நிலைமையைக் கட்டுப்பாட்டில் கொண்டுவர விசேட இராணுவ கொமாண்டோ படையணியினர் அங்கு விரைந்தனர்.

நேற்றுக்காலை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆதரவாளர்களுக்கிடையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தையின் மகன் காயம் அடைந்ததாகக் கூறப்பட்டது.

பல வாக்களிப்பு நிலையங்களில் வன்செயல்கள் காரணமாக வாக்களிப்பு இடம்பெறவில்லை என்றும் -

வாக்களிக்கச் சென்றவர்கள் மீது குண்டுவீச்சுக்களும், வாக்காளரின் அட்டைகள்பறித்தலும் சாதாரணமாக இடம்பெற்றன என்றும் - தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## வாக்கு எண்ணும் பணி ஆரம்பம்

# ஈ.பி.டி.பி. - கூட்டணி போட்டா போட்டி!

## அடுத்த நிலையில் ஐ.தே.கட்சி

யாழ்ப்பாணம்,ஒக்ரோபர்11

**நேற்று நடைபெற்ற பொதுத் தேர்தலில் யாழ்.தேர்தல் மாவட்டத்தில் அளிக்கப்பட்ட வாக்குகளை எண்ணும் பணி நேற்று முன்னிரவு ஆரம்பமானது. இன்று அதிகாலை வரை வெளியான தகவல்களின்படி தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிக்கும் இடையில் கடும் போட்டி நிலவுவதாக தெரிகின்றது. பலபகுதிகளில் ஐக்கிய தேசியக் கட்சி கணிசமான வாக்குகளைப் பெற்று அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸையும் முந்தும் நிலையில் இருப்பதாக முதலில் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.**

தபால் மூல வாக்குகளை எண்ணும் பணி பூர்த்தியடைந்ததை அடுத்து நேற்றிரவு 11 மணிக்கு மற்றைய வாக்குகளை கட்சி ரீதியாக பிரித்து அடுக்கும் வேலை ஆரம்பமானது.

இன்று காலை 6 மணிக்குப் பின்னரே கட்சிகளின் பெறுபேறு தொடர்பான தெளிவான நிலை வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று அதிகாலையில் கிடைத்த தகவல்களின்படி நல்லூர்த் தொகுதியில் ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியும் யாழ்ப்பாணத் தொகுதியில் 340 வாக்குகள் வித்தியாசத்தில் ஈ.பி.டி.பியும் முன்னணியில் நின்றன.

(8ஆம் பக்கம் பார்க்க)

## பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தெற்கில் முன்னணி நிலையில்!

### எனினும் அறுதிப் பெரும்பான்மைக்கு வாய்ப்பில்லை

கொழும்பு,ஒக்.11

நேற்று நடந்த பொதுத்தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளை எண்ணும் பணி நேற்று இரவு ஆரம்பமானது. தென்னிலங்கையில் பரவலாக பல இடங்களிலும் ஆளும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணித் தரப்பு முன்னணி நிலையில் இருப்பதாக இன்று அதிகாலை கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

எனினும் அந்த அணி தனித்து ஆட்சி அமைக்கக்கூடிய அறுதிப் பெரும்பான்மையைப் பெறுவதற்கு சாத்தியங்கள் மிகமிகக் குறைவு என்று தெரிவிக்கப்படுகிறது.

பொலன்னறுவை, அம்பாந்தோட்டை, பதுளை, கொழும்பு ஆகிய மாவட்டங்களில் ஐக்கிய தேசியக் கட்சி கணிசமான வாக்குகள் முன்னணியில் உள்ளது.

தெற்கின் மூன்றாவது பெரிய அணியாக மக்கள் விடுதலை முன்

(8ஆம் பக்கம் பார்க்க)

## 25 சதவீதமானோரே இங்கு வாக்களித்தனர்!

யாழ்ப்பாணம்,ஒக்.11

யாழ்.மாவட்டத்தில் நேற்று இடம்பெற்ற தேர்தலில் 25சதவீதமானவர்களே வாக்களித்தனர் என்று யாழ். செயலக புள்ளி விவரங்கள் தெரிவித்தன.

யாழ்நகரம் உட்பட ஏனைய நகரப்பகுதிகளில் உள்ள வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு மந்த நிலையில் காணப்பட்டது.

கிராமப்புறங்களிலுள்ள வாக்களிப்பு நிலையங்களில் சுமாரான மக்கள் வாக்களிப்பில் கலந்து கொண்டதனை அவதானிக்க முடிந்தது.

நேற்று அதிகாலை தொடக்கம் யாழ்.கரையோரப்பகுதிகளில் ஷெல்கள் விழத் தொடங்கியதை அடுத்து இப்பகுதிகளில் அமைக்கப்பட்ட வாக்களிப்பு நிலையங்களுக்கு காலையில் எவரும் வாக்களிக்கச் செல்லவில்லை.

• யாழ்.பரியோவான் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, சென். ஜேம்ஸ் பாடசாலை ஆகியவற்றில் அமைக்கப்பட்ட வாக்களிப்பு நிலையங்களில் சிறிது தாமதித்தே வாக்களிப்புகள் ஆரம்பமாகின.

இதேவேளை நல்லூர், அரியாலை பகுதி மக்களுக்காக யாழ். இந்துக் கல்லூரியில் அமைக்கப்பட்

(8ஆம் பக்கம் பார்க்க)

### நாடு முழுதும் இரவுநேர ஊரடங்கு

கொழும்பு,ஒக்.11

வன்செயல்கள் அதிகரித்துள்ளதை அடுத்து நாடு முழுவதும் நேற்றிரவு 11 மணிக்கு அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட ஊரடங்குச் சட்டம் இன்று காலை 6மணிக்கு நீக்கப்படுவதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.(இ-3)

**விசேட பதிப்பு**

**தேர்தல் தொடர்பான பிந்திய செய்திகள் அடங்கிய 'உதயன்' விசேட பதிப்பு இன்று பிற்பகலில் வெளியாகும். (ஆ-ர்)**

## வன்னியில் ரெலோ முன்னணியில்!

வன்னி மாவட்டத்தில் ரெலோ அமைப்பு முன்னணியில் உள்ளதாகத் தகவல்கள் கூறுகின்றன.

இரண்டாவது நிலையில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி, ஐ.தே.க. ஆகியவற்றிலும்பார்க்க 15 ஆயிரம் வாக்குகளால் ரெலோ முன்னணியில் உள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

வாக்கு எண்ணும் பணிகள் வவுனியா செயலகத்தில் இடம்பெறுகின்றன. (இ-3)

## ஸ்ரீமாவோ காலமானார்



கொழும்பு,ஒக்.11

உலகின் முதலாவது பெண் பிரதமர் எனப்பெருமைபெற்ற ஸ்ரீலங்காவின் முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க தனது 84ஆவது வயதில் நேற்றுக் காலை 10.20க்கு கடவத்தையில் உள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் மரணமானார்.

நித்தம்புவவில் உள்ள வாக்களிப்பு நிலையம் ஒன்றில் வாக்களித்த பின்னர் அவர் கொழும்பு நோக்கித் திரும்பிக் கொண்டிருந்த சமயம் கடவத்தைக்கு அருகே அவர் நெஞ்சுவலிக்கு உள்ளானார் என்றும் -

அங்குள்ள தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சில நிமிட நேரத்தில் அவரது உயிர் பிரிந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது.

அவரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் சனிக்கிழமை ஹொரகல்லவில் அவரது கணவரின் சமாதிக்கருகே இடம்பெறவுள்ளன.

அவரின் விருப்பப்படி அவரது பூதவுடல் அங்கு புதைக்கப்படவிருக்கின்றது.

(8ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வன்முறைகள் குறித்து முறையீடு!

யாழ்ப்பாணம்,ஒக்.11

நேற்று இடம்பெற்ற வாக்களிப்பின் போது பல்வேறு அசம்பாவித சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு இடங்களில்இடம்பெற்ற சம்பவங்களின் விவரம் வருமாறு:-

* யாழ்.இந்துக்கல்லூரி மைதானத்திற்குச் சமீபமாக கஸ்தூரியார் வீதியில் நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் கிரனேட் வீச்சு இடம்பெற்றது. இதில் சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவனான ஜெயகாந்தன் நிதர்சனன்(வயது10 - கந்தர்மடம்), சதாசிவம் சிவரூபன்(வயது 20- கஸ்தூரியார் வீதி) ஆகியோர் காயமடைந்தனர்.

* கொக்குவில் தலையாழிப் பகுதியில் நேற்றுக்காலை 9.30மணியளவில் கிரனேட்வீச்சுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

* தீவுப்பகுதியில் உள்ள வாக்களிப்பு நிலையங்களில் பணி புரிவதற்காக வாகனம் ஒன்றில் அங்கு சென்றுகொண்டிருந்த தமது 19 முகவர்களை ஊர்காவற்றுறையில் வைத்து ஈ.பி.டி.பி. அமைப்பினர்

(8ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் நேற்று பரவலாக ஷெல் வீச்சு!

### பீதியால் மக்கள் இடம்பெயர்வு

யாழ்ப்பாணம்,ஒக்.11

குடாநாட்டில் பல பகுதிகளிலும் நேற்றுக் காலை முதல் பரவலாக ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன. இதனால் பதற்றம் நிலவிய இடங்களில் இருந்து மக்கள் வெளியேறினர். ஷெல் சிதறல்களில் சிக்கி காயமடைந்த இருவர் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

பூநகரி மற்றும் தென்மராட்சிப் பகுதிகளில் இருந்து ஏவப்பட்ட ஷெல்களே குடாநாட்டில் பரவலாக வீழ்ந்து வெடித்துள்ளதாக படைவட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றுக்காலை முதல் யாழ்.நகரப்பகுதிகளில் விட்டு விட்டு பெரும் சத்தத்துடன் ஷெல்கள் வீழ்ந்தன.

நகரின் காட்டுக்கந்தோர், சுண்டுக்குளி, துராக்குளம், ஈச்சமோட்டை, குருநகர், சென்.பற்றிக்ஸ் கல்லூரிப் பகுதி, ஜோன் பொஸ்கோ பாடசாலைப்பகுதி, யாழ்.மத்திய கல்லூரிச்சுற்றாடல்,மணிக்கூண்டு கோபுரப் பகுதி, கோட்டைப்பகுதி போன்ற இடங்களில் ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன.

சுண்டுக்குளி மத்தியூஸ் வீதியில் வீழ்ந்த ஷெல்களினால் இரு வீடுகள் சேதமடைந்துள்ளன.

மேற்குறிப்பிட்ட பகுதியில் இருந்து மக்கள் ஏற்கனவே இடம்பெயர்ந்து விட்டதனால் உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கோப்பாய், உரும்பிராய், நீர்

(8ஆம் பக்கம் பார்க்க)

# கண்ணீர் அஞ்சலி

யா/வண்.நாவலர் மகா வித்தியாலய அதிபர்

## ஐயாத்துரை துரைராஜா

அவர்களின் மறைவையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/வண். நாவலர் மகா வித்தியாலய
மாணவர்கள்

(79356)

# கண்ணீர் அஞ்சலி

எமது நண்பன் து.திவாகரனின் அன்புத் தந்தையார்

## ஐயாத்துரை துரைராஜா

அவர்களின் மறைவையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

'99 கணிதப் பிரிவு மாணவர்கள்
சென்.ஜோன்ஸ் கல்லூரி.

(79364)

# கண்ணீர் அஞ்சலி

## ஐயாத்துரை துரைராஜா

(அதிபர், நாவலர் மகா வித்தியாலயம்)

அன்னாரின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு வேதனை அடைவதுடன் அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(O/L) '97 மாணவர்கள் சார்பில்
த.ஜெயந்தன்

*76/6, ஒட்டுமடம் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(79350)

# கண்ணீர் அஞ்சலி

தாயின் மடியில் 10/08/1972 — அநியாய அழிவில் 09/10/2000

## லோகநாதன் கியூபேட் (றஜீஸ்)

அவர்களின் அகால மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை அன்னாரது குடும்பத்தினருக்கு தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓடியன் மியூசிக் சென்டர்
சிங்கலாயர் வீடியோ அன் ஓடியோ

(79352)

# கண்ணீர் அஞ்சலி

அகில இலங்கை சைவக் குருமார் அர்ச்சகர் சபை ஸ்தாபகர்
அமரர் சிவஸ்ரீ க.சிவபாதசுந்தரக் குருக்கள்
அவர்களின் மனைவி

## சி.பொன்னம்மா

அவர்களின் மறைவுச் செய்திகேட்டு அதிர்ச்சியடைந்ததோடு அவர் தம் குடும்பத்தார்க்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அ.இ.சைவக் குருமார் அர்ச்சகர் சபை,
தலைமைச் செயலகம், நாயன்மார்கட்டு.

(79362)

# கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் சகல செயற்பாடுகளுக்கும்
ஆணிவேராக நின்று ஆக்கமும் ஊக்கமும் அளித்தவரான
வண்ணை நாவலர் மகா வித்தியாலய அதிபர்

## ஐயாத்துரை துரைராஜா

அவர்கள் அகால மரணமானதையிட்டு நாம் ஆழ்ந்த துயரமும் அதிர்ச்சியும் அடைகின்றோம். ஈடுசெய்யமுடியாத இழப்பினால் துயருற்று இருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவருக்கு எம் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி அவரின் ஆத்மா சாந்தியுற ஸ்ரீ கற்பக விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.

அகில இலங்கை சைவப் புலவர் சங்கம்,
யாழ்ப்பாணம்.

*125, அரசடி வீதி,*
*கந்தர்மடம்.*
(C/13332)

## சுதந்திரக் கட்சி யாழ்.கிளை அனுதாபம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக தொடர்ந்து 40 வருட காலம் பதவி வகித்து கட்சியை வளர்த்தெடுத்த ஒப்பற்ற தலைவி சிறிமாவின் மறைவினால் தாங்க முடியாத துயரடைந்துள்ளோம்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பின் சார்பில் அதன் தலைவர் வேல்முருகு தங்கராசா விடுத்துள்ள ஓர் அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிமா பண்டாரநாயக்கவின் மறைவை ஒட்டி அவர் விடுத்த அறிக்கையில் -

வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்த யாழ்.மாவட்ட மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்காக அவர் ஆற்றிய சேவைகளை மக்கள் மறக்கமாட்டார்கள் என்று தெரிவித்துள்ளார். (ஐ)

## லொறி தீக்கிரை

யாழ்ப்பாணம்,ஒக்.11

யாழ்நகரில் கே.கே.எஸ். வீதிப் பகுதியில் நேற்றுமுன்தினம் மூவர் கொல்லப்பட காரணமாக இருந்த லொறி இனந்தெரியாதோரினால் அன்றிரவே தீ மூட்டி எரிக்கப்பட்டது.

முற்றாக எரிந்த நிலையில் வீதியோரத்தில் கிடந்த இந்த லொறியினை நேற்று பெரும் எண்ணிக்கையானோர் பார்வையிட்டனர்.(ஐ-5-9-10-ரி)


ராஜா
(யாழ்ப்பாணம்)
விஜய், ஜோதிகா
மற்றும் பலரின் நடிப்பில
குஷி
காட்சிகள்: 10.30,2.00 (பு.நே)
(C/13207)

நாகம்ஸ்
சுன்னாகம
பிரசாந்த், ரம்பா
லிவிங்ஸ்டன்,
ராதாரவி நடித்த
பூமகள் ஊர்வலம்
(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00,2.30 (பு.நே)


## மரண அறிவித்தல்

### கந்தையா பரமநாதன்

(ஓய்வு பெற்ற உதவி முகாமையாளர் - ஹற்றன் நஷனல் வங்கி, கொழும்பு.)

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், நீர்வேலியை தற்போது வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பரமநாதன் அவர்கள் காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர்கள் கந்தையா - பொன்னம்மாவின் அன்பு மகனும், அமரர்கள் தியாகராஜா - அன்னம்மாவின் அன்பு மருமகனும், புஸ்பராணியின் (கிளி) அன்புக் கணவரும், பரமசாமி, பஞ்சலிங்கம், லங்காதேவி (லண்டன்), அமரர் கமலாதேவி, லக்குமிதேவி (லண்டன்), இராசபாக்கியம் (ஜேர்மனி), செல்வராணி (ஜேர்மனி), அமரர் சியாமளாதேவி, வத்சலாதேவி, நந்தினிதேவி, இராசரத்தினம் ஆகியோரின் சகோதரனும், பாசுபதி (அவுஸ்திரேலியா), பூலோகராணி (கனடா), அமரர் ஜீவமணி, நாகம்மா (லண்டன்), லோகேஸ்வரி கனகலிங்கம் (கொழும்பு), சண்முகராஜா (கனடா), அமரர் யோகநாதன், கோவிந்தன் (லண்டன்), பற்குணம் (லண்டன்), லோகநாதன் (ஜேர்மனி), குணநாயகம் (ஜேர்மனி), சிவராஜா (ஹொலண்ட்), சந்திரநாதன் பாக்கியலக்ஷ்மி ஆகியோரின் மைத்துனரும், இராசையா, அமரர்கள் சிவலிங்கம், பூபாலசிங்கம், புனிதவதி (கொழும்பு), செல்வரஞ்சினி (கனடா) ஆகியோரின் சகலனும், யோகம்பலம், ருக்குமணியின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.10.2000) வியாழக்கிழமை 11 மணிக்கு இராசவீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று மாசிவன் மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

தகவல்:
மனைவி

*இராச வீதி,*
*நீர்வேலி.*
(C/13343)

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 04 - 02 - 1943 — மறைவு 09 - 10 - 2000



## அமரர் ஐ.துரைராஜா அவர்கள்

(அதிபர், வண்/நாவலர் மகா வித்தியாலயம்)

எத்தனை தான் இடர்கள் வந்திடினும்
ஏற்றமுடன் பணிகள் புரிந்து நின்றீர்கள்.
நாவலர் மகா வித்தியாலயத்தை
நலமுடனே காத்து நின்றீர்கள்.
எம் அதிபருக்கு ஈடில்லை இணையில்லை என்று
எண்ணி நின்றோம்.
இன்று கண்ணீரை காணிக்கையாக்கி நிற்கின்றோம்.

09.10.2000 அன்று அகால மரணமடைந்த எமது பாடசாலை அதிபர் அமரர் ஐ.துரைராஜா அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குவதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

உப அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
(வண்/நாவலர் ம.வி.)

(79360)

# கண்ணீர் அஞ்சலி

தாயின் மடியில் 10 - 08 - 1972 — அநியாய அழிவில் 09 - 10 - 2000



## லோகநாதன் கியூபேட் (றஜீஸ்)

சிந்தையில் நிலைத்து நின்றாய்
இல்லத்தின் சுடர் விளக்காய்
சுடர்விட்டுப் பிரகாசித்து நின்றாய்
ஞானமதில் நாம் கண்டு மகிழ
சீலமுடன் சீவித்தவனே - உன்னை
காலனுனை கவர்ந்திழுத்த
கதியென்ன காண்கிலோம்
உற்றாரும் உளம் உருக - நீ
பெற்றெடுத்த பாலகரும்
பற்றறுத்து பரிதவிக்கையிலே - நீ
விந்தையாய் மறைந்ததேனோ?
எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி
மீளாத்துயில் கொண்டதேனோ?

ஹெண் றெக்கோடிங் ஸ்பொட்
நிர்வாகம்

(79353)

# கண்ணீர் முத்துக்கள்

## அமரர் ஐயாத்துரை துரைராஜா

காலையிற் சிரித்த முகம்
மாலையில் வாடியதே!
காலன் உன் உயிர் கவர
கடுகதியாய் வந்தானோ?
கற்பக விநாயகனின்
கழலிணையே வணங்கும் உமது
ஆத்மா என்றும் அவர்
பாதத்தையே சேர்ந்திருக்கும்.

*அன்னாரின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.*

பிரம்மஸ்ரீ விஸ்வநாதசர்மா குடும்பம்
நல்லூர்.

பிரம்மஸ்ரீ பாலமுரளீதரக் குருக்கள் குடும்பம்.
பிரதமகுரு, சாந்தையர் மடம்
(ஸ்ரீ கற்பகவிநாயகர் கோவில்)

(79354)

# துயர் பகிர்வோம்!

## ஐயாத்துரை துரைராஜா B.Com.

(அதிபர், வண்/நாவலர் ம.வி).

அவர்கள் 09.10.2000 அன்று அகால மரணத்தை தழுவிக் கொண்டமையைக் கேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயரடையும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்.

நாவலர் தர்மகர்த்தா சபை,
வண்ணார்பண்ணை.
யாழ்ப்பாணம்.

(79363)

உதயன்

## தொக்கு நிற்கும் கேள்விகள்!

இலங்கை நாட்டின் பதினொராவது நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்களிப்பு ஒருவாறாக நேற்று ஒப்பேறிவிட்டது.

முப்பத்தாறு நாள் தேர்தல் அணி நேற்றுடன் ஓய்ந்தது. மக்கள் அளித்த தீர்ப்பு - தேர்தல் முடிவுகள் - அனேகமாக நாளை நண்பகல் அளவிலேயே முற்றாக வெளிவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தாம் வாக்களித்த கட்சி வெற்றி பெற்றுள்ளதா, தாம் வாக்களித்த வேட்பாளர் தெரிவு செய்யப்பட்டுள்ளாரா என்பதனை அறிவதற்கு வாக்காளப் பெருமக்கள் 36 மணித்தியாலங்கள் ஆர்வத்துடன் காத்திருப்பர்.

அவர்களை விடவும் மனப் பதற்றத்துடன், நிலைகொள்ள முடியாமல், இவ்வேளையில் ஏங்கித் தவித்துக் கொண்டிருப்பவர்கள் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களாகவே இருப்பர்.

கடந்த ஒன்றரை மாத காலமாக அவர்கள் பட்ட கஷ்டமும் அலைச்சலும் அவர்களைவிட வேறு யாருக்குத் தெரியப் போகிறது?! தெரிந்தவர்கள் தெரியாதவர்கள் என்று எல்லோரிடமும் வாக்குக் கேட்டுஇரந்து தாழ்ந்து நின்ற கேவலமும் அவர்களுக்குத் தான் தெரியும்!.

நாடாளுமன்ற உறுப்பினர் பதவி மூலம் கிடைக்கக் கூடிய சுயலாபங்களைக் கருத்திற் கொண்டு வாக்குப் பிச்சை கேட்டு கௌரவத்தை இழந்தவர்கள் அல்லவா? அதனால் வாக்காளரின் தீர்ப்பை அறிவதில் வேட்பாளருக்கு உள்ள அக்கறை, ஆர்வம் வாக்காளருடன் ஒப்பிடும் போது பல மடங்கு பெரிது.

அவர்களை விடவும் தேர்தல் முடிவுகளை அறிவதில் அதிஉயர் அக்கறை கட்சிகளின் பிரதானிகளுக்கே இப்போது கூடுதல். விகிதாசாரத் தேர்தல் முறை நடைமுறைக்கு வந்த பின்னர் கட்சிகளுக்குக் கிடைக்கும் வாக்குகளின் செல்வாக்கே உயர்ந்து நிற்கிறது. அதனால் கட்சியின் பெயரால் வாக்குகளை வாங்குவதற்காகச் செலவிட்ட பணம் 'நட்டம்' போய் விடக் கூடாது என்பதில் கட்சிப் பிரதானிகளுக்கு உள்ள அக்கறை பெரிது.

வாக்காளர்கள் பிறருக்குச் சொல்லாமல் வழங்கிய மௌனத் தீர்ப்பு எத்தனையோ தரப்பினருக்கு ஏமாற்றத்தையும் நட்டத்தையும் மனச் சோர்வையும் தரும். சில தரப்பினர் மட்டுமே நன்மையும் மகிழ்ச்சியும் அடைவர். இது தேர்தல் நியதி.

வாக்களிப்பு முடிந்துவிட்டது; பெறுபேறுகளும் வெளிவரப் போகின்றன. இனிமேல்தான் தெற்கில் மோதல்களும் வன்செயல்களும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தோல்வியுறும் கட்சிகள் ஏனைய மாற்றுக்கட்சிகள் மீது வெறும் குற்றச்சாட்டுகளை மட்டும் சுமத்திவிட்டுச் சும்மா இருந்துவிடப் போவதில்லை. ஒரே கட்சியின் வேட்பாளர்களே ஒருவரை மற்றவர் காட்டிக் கொடுக்கும் விதத்திலும் மோதும் விதத்திலும் தேர்தலுக்கு முன்னர் நடந்து கொண்டார்கள். அவ்வாறாயின் வெற்றி தோல்வியின் பின்னர் மோதல்கள் மிகப் பயங்கரமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

தெற்கில் தேர்தலுக்குப் பின்னரே, - அதாவது இன்றும் நாளையும் - பதற்ற நிலை, பெரும் நெருக்கடி நிலை உண்டாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், இங்கு குடாநாட்டில்.....?

நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்படும் இறுதி நாளான செப்ரெம்பர் 4ஆம் திகதிக்கு முதல் நாளே போர் தீவிரமடைந்துவிட்டது. அதிலிருந்து சண்டை இல்லாமல் கழிந்த நாள் எதுவும் இல்லை. போதாக் குறைக்கு தேர்தல் நாளான நேற்றைய தினம் கங்குல் பொழுதே ஷெல் வெடித்த சத்தத்துடனேயே மலர்ந்தது. இதனை எழுதிக் கொண்டிருந்த பிற்பகல் வரை எறிகணை வீச்சுகளினால் யாழ்.நகரில் உண்டாகிய அதிர்வுகளும் பதற்றமும் தணியவில்லை.

தேர்தல் வேறு போர் வேறு. இரண்டும் ஒன்றாக இடம் பெறலாம் என்ற புதுமையான "கோட்பாடு" யாழ்ப்பாணத்தில் நடைமுறையாகியது! அந்த வகையில் இங்கு நடைபெற்ற தேர்தல் உண்மையானதா, நீதியானதா, உள்நோக்கமற்றதா என்ற கேள்விகள் தொக்கு நிற்கின்றன.!



'போரூட்' நிறுவன அனுசரணையில், வல்வெட்டித்துறை மாவட்ட மருத்துவமனையில் புனரமைக்கப்பட்ட ஆண்கள் விடுதியை, 'போரூட்' திட்ட இணைப்பாளர் செல்வி ஆன் ஆங்கிள்விற் நாடா வெட்டி திறந்து வைக்கின்றார். அருகில் (இடதுபுறம்) வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கே. மயிலேறும்பெருமாள், செல்லப்பா பத்மநாதன், வல்வை நகரசபைத் தலைவர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

(படம்: நெல்லியடி செய்தியாளர் இ.கிருபாகரசூரியன்)



உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில் நிறுவப்பட்ட மலசல கூடமும் தண்ணீர்த் தாங்கியும் கடந்த மாதம் திறந்து வைக்கப்பட்டன.

வலி.கிழக்குப் பிரதேசசபைத் தலைவர் பூ.குணசிங்கம் நாடா வெட்டி அவற்றைத் திறந்து வைத்தபோது எடுக்கப்பட்ட படம். பாடசாலை அதிபர் சு.யோகராசாவும் படத்தில் காணப்படுகிறார். (ஐ-72)

(படம்: கோப்பாய் செய்தியாளர்)



யாழ்.சன்மார்க்க மகாவித்தியாலயத்தில் அண்மையில் சிறுவர் பூங்கா திறப்பு விழா நடைபெற்றது. அந்நிகழ்வில் கலந்து கொண்ட ஈ.பி.ஆர்.எல்.எவ் (வரதர் அணி) யாழ்.மாவட்ட பொறுப்பாளர் த.சுபத்திரன் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். யாழ்.கல்வி வலயப் பணிப்பாளர் செ.மகாலிங்கம், பாடசாலை அதிபர் து.நடராஜலிங்கம் ஆகியோர் மேடையில் உள்ளனர். (ஐ-5)

(படம்: அலுவலகச் செய்தியாளர்)

## ஐரோப்பிய கண்காணிப்புக் குழு 3 அறிக்கைகளை வெளியிடும்

கொழும்பு,ஒக்.11

தேர்தலைக் கண்காணிக்க வந்துள்ள ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் கண்காணிப்புக் குழு தங்களது அவதானிப்புகள் குறித்து மூன்று அறிக்கைகளை வெளியிடும் என குழுவின் தலைவர் ஜோன் கஸ்நாகன் தெரிவித்துள்ளார்.

முதல் ஆரம்ப அறிக்கை, தேர்தல் முடிவடைந்து சில மணி நேரத்தில் வெளியாகும். இந்த அறிக்கையானது தங்கள் உறுப்பினர்கள் இங்கு வந்து கண்காணிப்புப் பணியை ஆரம்பித்தது முதல் தேர்தல் தினமன்று வரையிலான சம்பவங்களை உள்ளடக்கியதாக இருக்கும்.

இரண்டாவது அறிக்கையானது எமது உறுப்பினர்கள் 69 பேரும் தாங்கள் கண்காணிப்புப் பணிக்கான பகுதிகளுக்குச் சென்ற இடங்களிலிருந்து திரும்பியதும் அவர்களது மதிப்பீடுகளுக்கமைய வெளியிடப்படும். இந்த அறிக்கை நாளை 12 ஆம் திகதி வெளியாகும்.

இதன்பின் ஐந்து நாள்களில் இறுதி அறிக்கை ஐரோப்பிய ஒன்றிய ஆணைக்குழுவிடம் கையளிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

## ஹர்த்தால் அனுஷ்டிப்பு

மட்டக்களப்பு,ஒக்.11

மட்டக்களப்பு நகரப் பகுதியில் நேற்றுமுன்தினம் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

நேற்று நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலை பகிஷ்கரிக்குமாறு கோரி சுதந்திரமாணவர் முன்னணி விடுத்த வேண்டுகோளை அடுத்தே. பகிஷ்கரிப்பு அனுஷ்டிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7-21)

## கச்சாயில் தாயும் மகளும் ஷெல் வீச்சில் காயம்

நெல்லியடி,ஒக்.11

கொடிகாமம் கச்சாய்ப் பகுதியில் நேற்று அதிகாலை வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் தாயும் மகளும் காயமடைந்தனர்.

இருவரும் நேற்று கொடிகாமம் பொலீஸாரால் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

அருந்தவநாயகி மகேந்திரம் (வயது 38), அவரது மகளான மகேந்திரம் தர்சினி (வயது 20) ஆகிய இருவருமே காயமடைந்தனர். (ஐ-109-173)

## புலிகள் தரப்பில் நால்வர் உயிரிழப்பு

வவுனியா,ஒக்.11

'ஓயாத அலை-4' நடவடிக்கையின் போது புலிகளின் தரப்பில் உயிரிழந்த மேலும் நான்கு பேரின் விவரங்களை 'புலிகளின் குரல்' வானொலி நேற்று வெளியிட்டது.

★ தணிகைமணி (சோலைமலை இராஜேஸ்வரன் - மன்னார்)

★ சாந்தமலர் (நவரட்ணம் லதா - முத்தையன் கட்டு)

★ சிறப்பு எல்லைப்படை வீரர் ஜெனந்தா (எட்வேட் ஜெனந்தா - யாழ்ப்பாணம்)

★ சிறப்பு எல்லைப்படை வீரர் சுந்தரராஜன் (வேலு சுந்தரராஜன் - விஸ்வமடு)

ஆகியோரே உயிரிழத்தவர்களாவர். (ஐ-9)

## பெயர்களைப் பதிய மக்கள் முண்டியடிப்பு

தென்மராட்சி,ஒக்.11

சாவகச்சேரி நகரப்பகுதியில் உள்ள தமது வர்த்தக நிலையங்கள், வீடுகள் ஆகியவற்றைப் பார்ப்பதற்கு நூற்றுக்கணக்கான வர்த்தகர்களும், பொதுமக்களும் கடந்த ஞாயிறன்று நெல்லியடியில் உள்ள சாவகச்சேரி வணிகர் மன்ற அலுவலகத்தில் தமது பெயர்களைப் பதிவு செய்தனர்.

சாவகச்சேரி நகரப்பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள், வீடுகள் ஆகியவற்றைப் பார்வையிட பெயர்களைப் பதிவு செய்யுமாறு யாழ். மாவட்ட ஐ.தே.க.முதன்மை வேட்பாளர் அறிவித்ததையடுத்து நூற்றுக்கணக்கான மக்கள் தமது பெயர்களைப் பதிவு செய்ததைக் காணமுடிந்தது. (ஐ-117)

## ஆஸ்பத்திரிக்கு கப்பலில் மருந்து

யாழ்ப்பாணம்,ஒக்.11

பருத்தித்துறைக்கு நேற்று வந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் யாழ். போதனா வைத்தியசாலைக்கென மருந்து வகைகள் எடுத்து வரப்பட்டன.

சிகிச்சைக்காகத் தென்பகுதி சென்ற 20 நோயாளர்கள் இக்கப்பலில் அழைத்து வரப்பட்டனர். சர்வதேச தொண்டர் நிறுவனங்களுக்கான பொருள்களும், 203 தபாற் பொதிகளும் இக்கப்பலில் எடுத்து வரப்பட்டன.

இங்கிருந்து 18 நோயாளர்கள் இக்கப்பலில் அனுப்பி வைக்கப்பட்டனர். குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட தபால்கள் அடங்கிய 41 தபாற் பொதிகளும் அனுப்பி வைக்கப்பட்டன. (ஐ-10-15)

## விளையாட்டுக் கழகங்கள் பதிவு

சண்டிலிப்பாய்,ஒக்.11

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களம் அண்மையில் விடுத்த சுற்றறிக்கைக்கு இணங்க வலிகாமம் மேற்கு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள விளையாட்டுக் கழகங்கள் பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

இதுவரை 32 விளையாட்டுக் கழகங்கள் சங்கானையிலுள்ள வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பணிமனையில் பதிவு செய்யப்பட்டுள்ளன.இதுவரை பதிவு செய்யப்படாதிருக்கும் ஏனைய விளையாட்டுக் கழகங்களும் விரைவில் வந்து பதிவுகளைச் செய்து கொள்ளுமாறும் விளையாட்டு உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (ஐ-135)

## புங்குடுதீவில் கண்ணி வெடி

புங்குடுதீவில் கடந்த ஞாயிறன்று காலை 8 மணிக்குக் கடற்படையினர் மேற்கொண்ட தேடுதல்களின் போது 21 கிலோ நிறையுடைய கண்ணிவெடி ஒன்று கைவிடப்பட்ட காணி ஒன்றில் இருந்து மீட்கப்பட்டுள்ளதாக விசேட ஊடகத்தகவல் நிலையம் தெரிவித்துள்ளது. (ஐ-3)

## இளைஞரின் சடலம் ஒப்படைப்பு

சரசாலைப் பகுதியில் இடம் பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் பலியானதாகத் தெரிவித்து இளைஞர் ஒருவரது சடலம் பொலீஸாரால் யாழ்.ஆஸ்பத்திரியில் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் ஒப்படைக்கப்பட்டது. (ஐ-139)

## பெரும் தாக்குதலை எதிர்பார்த்து வடக்கில் படையினர் உஷார் நிலை!

கொழும்பு.ஒக்.11

குடாநாட்டில் புலிகளின் பாரிய தாக்குதலை எதிர்பார்த்து படையினர் முழு உஷார்நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தேர்தலை ஒட்டிப் புலிகள் பெரும் தாக்குதல் தொடுக்கலாம் என எதிர்பார்க்கும் இராணுவத் தலைமைப் பீடம் நேற்றுமுன்தினம் படையினரை முழு உஷார் நிலையில் வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது குடாநாட்டில் தென்மராட்சிப் பகுதியிலும்,வடமராட்சி கிழக்கிலும் நடைபெறும் மோதல்கள் தீவிரமடையலாம் என்று படைத் தரப்பில் எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் படையினர் முழு உஷார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"ரிவிகிரண"நடவடிக்கை மூலம் கொழும்புத்துறைப் பகுதியில் கைப்பற்றிய 6 சதுர கிலோ மீற்றர் பகுதியையும்,"ஹினிகிர" நடவடிக்கை மூலம் கைப்பற்றிய 10 சதுரக்கிலோ மீற்றர் பிரதேசத்தையும் பலப்படுத்தி வருவதாகப் படையினர் தெரிவித்துள்ளனர். (ஐ-4)

## புலிகளின் தாக்குதலில் கடற்படை படகு சேதம்

கொழும்பு,ஒக்.11

திருகோணமலைத் துறைமுகத்திற்கு வெளியே கடந்த ஞாயிறு பிற்பகல் 5மணியளவில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் கடற்படையினரின் படகு ஒன்று சேதத்திற்குள்ளானதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

மூதூரில் இருந்து உப்பாறு நோக்கிச் சென்று கொண்டிருந்த விடுதலைப்புலிகளின் கண்ணாடி இழைத்த படகுனளை அவதானித்த கடற்படையின் ரோந்துப் படகு அவற்றை நோக்கிச் சென்றுகொண்டிருந்த சமயம் கடற்கண்ணியில் சிக்கியதாகவும்- அத்துடன் கரையில் இருந்து விடுதலைப்புலிகள் அப்படகின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகவும்-

இதனால் ரோந்துப்படகுக்குச் சிறுசேதம் ஏற்பட்டது என்றும் - விசேட ஊடகத்தகவல் நிலையம் அறிவித்தது.

இத்தாக்குதலின் போது கடற்படையினருக்குச் சேதம் ஏற்படவில்லை என்றும் -

அந்தப்பகுதிக்கு விரைந்த கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் விடுதலைப்புலிகளின் படகு மூழ்கடிக்கப்பட்டதாகவும் - மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

### உதயவாக்கு

**தனி மனிதனுக்காக உயிர் கொடுப்பவனை விட இலட்சியத்துக்காக உயிர் கொடுப்பவனே தியாகி.**

*- ஹஜ்ரத் அலி(ரலி)*

### நாளை

**புரட்டாதி 26**

**வியாழக்கிழமை**

*திதி:* சதுர்த்தசி பிற்பகல் 3.00 வரை

*நட்சத்திரம்:* உத்தரட்டாதி முன் இரவு 9.36 வரை

நடேசர் அபிஷேகம்

*சுபநேரம்:* 7.32 - 9.02

*ராகுகாலம்:* 1.32 - 3.02

(இரவுக்கும் பகலுக்கும் பழைய நேரப்படி)

# சாவகச்சேரியில் பல இடங்களில் வீடுகள் தரைமட்டமாக காட்சி!

## கடைசியாக அங்கிருந்து வந்த வயோதிபர் தகவல்

தென்மராட்சி, ஒக். 11

கடந்த மே மாதம் படையினர் சாவகச்சேரி நகரிலிருந்து வெளியேறிய பின்னர் நகர்ப் பகுதியில் வீழ்ந்த விமானக் குண்டுகள் மற்றும் ஷெல்களால் நகரின் சில பகுதிகளில் இருந்த கட்டடங்கள் வீடுகள் தரைமட்டமாகி வெட்ட வெளிகளாகக் காணப்படுகின்றன. குறிப்பாக சிவன் கோயிலடி, ரயில் நிலைய வீதி, கற்குளி, நுணாவில் கிழக்கு, கல்வயல் போன்ற இடங்களில் மோசமான சேதங்கள் ஏற்பட்டுள்ளன. அங்கு நின்ற பயன்தரும் மரங்களும் முறிந்துள்ளன.

சாவகச்சேரி நகரிலிருந்து கடைசியாக வடமராட்சிக்கு வந்து சேர்ந்த சாவகச்சேரி பொலீஸ் நிலைய வீதியில் வசிக்கும் சுப்பிரமணியம் சோமநாதன் (வயது 64) என்பவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த மே மாதம் 20 ஆம் திகதி படையினர் சாவகச்சேரியை விட்டு வெளியேறிய பின்னர் தடிகளின் உதவியில்லாமல் நடக்க முடியாத என்னுடன் அங்குள்ள திருச்சபை போதகர் குடும்பம் உட்பட 20 பேர் எனது வீட்டில் தங்கியிருந்தனர். எனது வீட்டில் தேவையான அளவு நெல் இருந்ததால் என்னுடன் இருந்த குடும்பத்துக்கு உணவுககுப்பஞ்சம்ஏற்படவில்லை. நகரில் இருந்த தனியார் மருந்தகத்திலிருநத மருந்துப் பொருள்கள், பால்மா வகைகள் எனது வீட்டில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்ததால் எமக்கு எதுவித குறையுமில்லாமல் இருந்தது.

கடந்த மாதம் 19 ஆம் திகதி வாகனத்தில் வந்த சிலர் என்னுடன் இருந்த அனைவரையும் வன்னிக்கு ஏற்றிச் சென்று விட்டனர். எனது கால் நடக்க முடியாத நிலையை எடுத்துக் கூறி வாகனத்தில் செல்ல மறுத்து விட்டேன். என்னுடன் இருந்தவர்கள் சென்ற பின்னரே எனது தனிமையை உணர்ந்தேன்.

19 ஆம் திகதியிலிருந்து 28 ஆம் திகதி வரை காலை உணவாக ஐந்து கரண்டி அரிசி மாவுடன் ஜாம் கலந்தும், மதிய உணவாக நெஸ்பிரேயும் இரவு உணவாக மார்மைற்றும் சாப்பிட்டுக் காலத்தைக் கடத்தினேன். பத்துத் தினங்களாக சோறு சாப்பிடாததால் சோர்வடைந்த நிலையில் நகரப்பகுதியில் நிற்போரிடம் உணவுககுச் சொல்வதற்காக எனது அடையாள அட்டைகள் எதுவும் எடுக்காமல் சென்ற வேளையில் எனது வீட்டிலிருந்து 100 யார் தூரத்தில் உள்ள டாக்டர் சண்முகராசா வீட்டிற்கு முன்பாக சீருடை அணிந்தவர்கள் நிற்பதைக்கண்டு தாங்குதடியுடன் நடந்து சென்ற வேளையில் அவ்விடத்திற்கு வர வேண்டாமென சைகை காட்டப்பட்டது. எனக்கு சாப்பாடு தருமாறு தமிழில் உரத்த குரலில் கூறினேன். அங்கு வந்த ஒருவர் சிங்களத்தில் என்ன வேண்டுமெனக் கேட்டார் எனக்கு சிங்களம் தெரிந்தபடியால் தாராளமாக அவருடன் உரையாடினேன். பின்னர் [அங்கு] வந்த அதிகாரி தரத்தில் உள்ளவருடன் வந்தவர்கள் என்னை அழைத்துச் சென்று உணவு, சிகரட் தந்தனர். அப்போது தான் சாவகச்சேரி நகர்ப் பகுதி படையினரின் கட்டுப் பாட்டுக்குள் வந்த விடயம் எனக்குத் தெரிந்தது.

அன்று மாலை எனது கண்களைக் கட்டிய பின்னர் வாகனமொன்றில் ஏற்றி வரணியில் உள்ள சிவில் அலுவலகத்தில் ஒப்படைத்தனர். சிறிது நேரத்தில் மூன்று வயோதிபர்களையும் அங்கு கொண்டு வந்து சேர்த்தனர் — இவ்வாறு அவர் தெரிவித்தார் (ஐ-117)

## வயோதிபப் பெண் காயம்

ஓடிக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிளில் இருந்து தவறிவிழுந்து வயோதிபப் பெண் ஒருவர் படுகாயமடைந்தார்

யாழ்ப்பாணம் சுண்டுக்குளிப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அப்பகுதியைச் சேர்ந்தவரான வேலாயுதபிள்ளை சின்னம்மா (வயது 86) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (இ-15)

## குருபூஜை

நீராவியடி வண்ணை வாலாம்பிகா சமேத வைத்தியநாதர் கோயிலில் இன்று புதன் கிழமை கடையிற் சுவாமிகள் குருபூசை நடைபெறவுள்ளது.

அப்போது சிவலிங்க பூஜை, லட்சார்ச்சனை ஆகியவையும் இடம் பெறும். (இ-ஒ)

## 7 ஆம் ஆண்டு நினைவலைகள்



| செல்வி | அமரர் | செல்வி |
|---|---|---|
| செ. சுஜாத்தா | க. செல்வராசா | செ. யசோதா |
| (சாவகச்சேரி இந்துக் கல்லூரி O/L மாணவி) | (உரிமையாளர், உதயன் மரக்காலை) | (சாவகச்சேரி மகளிர் ம.வி., உயர்தர உயிரியல் பிரிவு மாணவி) |
| மண்ணுலகில்: 1977-07-20 | 1954-12-18 | 1976-06-29 |

விண்ணுலகில்: 1993-09-28

திதி: 2000 -- 10 -- 11

நீவீர் மூவரும் மண்ணை விட்டு விண்சென்ற
நாளிலிருந்து ஆண்டுகள் ஏழு ஆகினவே — உம்மை
எண்ணியெண்ணி ஏங்கி நாம் நிதம் இங்கு அழுகின்றோம்.
கண்ணிலிருந்து கண்ணீர் வெள்ளம் ஆறாய் ஓட
உங்களை நினைவு கூருகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் பிரிவால் துயருறும்:

மனைவி செ. மங்கையர்க்கரசி
நெல்லியடி.

மகன் செ. உதயன்
(கனடா)

(சி/13172)

## கண்ணீர் அஞ்சலி

எமது நண்பர்களாகிய

**லோகநாதன் கியூபேட் (றஜீஸ்)**
**விஸ்வலிங்கம் ஜோசப் ரஞ்சித்குமார்**

இவர்களின் திடீர் மரணம் கேட்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம். அவர்களின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் இவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். வோர்ச் வேக்ஸ்,
55, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

[79352]

## கண்ணீர்ப் பூக்கள்

எமது பாசமிகு நண்பன்

**லோகநாதன் கியூபேட்**
(றஜீஸ், ஷன் றெக்கோடிங் ஸ்பொட்)

அவர்கள் 9-10-2000 அன்று அகாலமரணம் அடைந்தமையிட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம். இவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நியூ லலிதா ஜுவலர்ஸ்
170, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(79248)

## கண்ணீர் அஞ்சலி

**ஐயாத்துரை துரைராஜா**
(அதிபர், நாவலர் மகா வித்தியாலயம்)

எமது கழகப் பணிகளுக்கு சகலவகைகளிலும் உறுதுணையாக இருந்த அன்னாரது ஆத்மா சாந்தியடைய விநாயகப் பெருமான் திருவடிகளை இறைஞ்சுகிறோம்.

வண்ணை சாந்தையர்மடம்
ஸ்ரீகற்பக விநாயகர் கோயில்
சைவசமய அபிவிருத்திக் கழகம்.

(79347)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/சிறுப்பிட்டி
**இ. த. க. பாடசாலையைச் சேர்ந்த**
5 ஆம் ஆண்டு
புலமைப் பரிசில் பரீட்சையில்
சித்தி எய்திய பின்வரும் மாணவர்களைப்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஸ்ரீஸ்கந்தராசா சுரேன் - 160
விஜயராஜன் சஜந்தா - 140

இவர்களை வழிநடத்திய அதிபர், ஆசிரியர்கள், நீர்வேலி கலைமகள் கல்வி நிலையத்தினர் அனைவரையும் உளமார வாழ்த்துகின்றோம்-

பெற்றோர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர்கள்.

(79302)


## COMPUTER

உங்களிடம் கணனி இயந்திரம் இல்லையா?

பல தரப்பட்ட மொடல்கள்

PRINTER, LASER PRINTER,
SCANER, INK CARTRIGES,
FLOPPY DISC, ACCESSORIES,
PHOTO START TONER POWDER,

இன்னும் பல.

குறிப்பு:—
எம்மிடம் ஏற்கனவே பதிவுசெய்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

மேலும் விவரங்களுக்கு
**லிங்கன் ஸ்ரோர்ஸ்**
168, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/13320)

# போலிப் பெற்றோல் தயாரித்ததாக ராமர்பிள்ளை மீது வழக்குத் தாக்கல்!

சென்னை, ஒக். 11

போலிப் பெற்றோல் தயாரித்து மோசடி செய்ததாக ராமர்பிள்ளை உட்பட 5 பேர் மீது எழும்பூர் நீதிமன்றத்தில் மத்திய புலனாய்வுத்துறையினர் குற்றப் பத்திரிகைத் தாக்கல் செய்துள்ளனர்.

தமிழகத்தில் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த ராமர்பிள்ளை மூலிகை ஒன்றிலிருந்து பெற்றோலைத் தயாரிக்கும் வழிமுறையைத்தான் கண்டுபிடித்துள்ளதாக சில வருடங்களுக்கு முன்னர் அறிவித்திருந்தார்.

இது தமிழக அரசின் கவனத்துக்கு வந்த பின்னர், முதல்வர் கருணாநிதி, சென்னை தொழில் நுட்ப நிறுவன விஞ்ஞானிகள் போன்ற பல முக்கியஸ்தர்களுக்கு தனது பெற்றோல் தயாரிப்பு முறையை வெவ்வேறு சந்தர்ப்பங்களில் ராமர்பிள்ளை விளக்கினார்.

ராமர்பிள்ளையின் செய்முறை விளக்கத்தை விஞ்ஞானிகள் மற்றும் பேராசிரியர்கள் மோசடிச் செயல் எனத் தெரிவித்தபோதும், தமிழக, ஆந்திர அரசுகள் அவருக்கு பல லட்சம் ரூபா ஆராய்ச்சி நிதி வீடு மற்றும் மூலிகைப் பெற்றோல் தொழிற்சாலை அமைக்க நிலம் ஆகியவற்றை வழங்கியிருந்தன. ராமர்பிள்ளை மூலிகைப் பெற்றோல் விற்பனைக்கு விநியோக உரிமை கோருபவர்களிடம் இருந்தும் பணம் பெற்றுள்ளார்.

இந் நிலையில், மூலிகைப் பெற்றோல் குறித்து விசாரணை மேற்கொண்ட மத்திய புலனாய்வு நிறுவனம் தற்போது ராமர்பிள்ளை அவரது வளர்ப்புத்தாயார் உட்பட 5 பேர் மீது வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

இவர்கள் மீது போலிப்பெற்றோல் தயாரித்தது அதன் விநியோக உரிமையில் பல லட்சம் மோசடி செய்தது. ஆகிய குற்றங்கள் சுமத்தப்பட்டு 7 ஆயிரம் பக்கங்கள் கொண்ட குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ஒ-8)

## இந்திய வனவிலங்குப்பூங்காவில் புலிகள் உணவருந்த மறுப்பு.

ஹைதராபாத், ஒக். 11

இந்தியாவின் ஆந்திர மாநிலம், ஹைதராபாத்தில் உள்ள நேரு வனவிலங்குப் பூங்காவில் புலிகள் உணவு அருந்த மறுத்து வருகின்றன.

சில தினங்களின் முன்னர் இனம் தெரியாதவர்கள் குட்டிப் பெண்புலி ஒன்றை விஷ உணவு கொடுத்துக் கொன்று தலையை வெட்டித்தோலை உரித்துச் சென்றனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து தாய்ப்புலி உணவு உட்கொள்ள மறுத்து வந்தது.

இப்போது பூங்காவில் உள்ள மற்றைய 4 புலிகளும் உணவருந்த மறுத்து வருகின்றன.

இதனால் அவற்றின் உயிர்களுக்கு ஆபத்து ஏற்படும் அச்சம் தோன்றியுள்ளதாகவும். — புலிகளைக் காப்பாற்ற தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் வனவிலங்குப்பூங்கா அதிகாரிகள் தெரிவித்தனர்.

(ஒ)

## யூகோ மீதான தடைகளை அகற்ற முடிவு

பெல்கிரேட், ஒக. 11

யூகோஸ்லாவியா மீதுவிதித்திருந்த தடைகளை ஐரோப்பிய சமூகம் விலக்கிக் கொள்ள முன்வந்துள்ளது.

புதிய அதிபராக மிதவாதியான கொஸ்டுனிகா பதவியேற்றதை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது.

## சிறுமி மீது வல்லுறவு புரிந்த இந்தியபடை அதிகாரிக்கு சிறை!

ஜம்மு, ஒக். 10

காஷ்மீரில் சிறுமியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய இந்திய இராணுவ அதிகாரிக்கு சிறைந் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஜம்முவில் தோடா மாவட்டத்தின் நௌதாம் கிராமத்தில் 14 வயதான சிறுமியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாக கப்டன் ரவீந்தர்சிங் என்பவர் மீது குற்றம் சுமத்தி வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

விசாரணைகளின் முடிவில் ரவீந்தர்சிங் குற்றவாளியாக நிரூபணம் ஆகியதால், அவருக்கு நீதிபதி 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துள்ளார்.

(ஒ-8)

# பீஹாரில் மதக் கலவரம்: ஊரடங்கு உத்தரவு அமுல்!

பாட்னா, ஒக். 11

இந்தியாவின் பீஹார் மாநிலத்தில் உள்ள திகார் ஷெரீப் நகரில் மதக் கலவரம் ஏற்பட்டதை அடுத்து அங்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இரு மதத்தவர் உரிமைகள் கோரி வந்த பகுதிநீதியில் மன்றத் தீர்ப்பினால் மக்கள் நடமாடத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

கடந்த ஞாயிறு இரவு ஒரு தரப்பினர் விக்கிரகம் ஒன்றை வைத்து அதனைச் சுற்றி மதில்களையும் எழுப்பி விட்டனர். இதனால் ஆவேசமுற்ற மறு தரப்பினர் விக்கிரகத்தை அகற்றியதை அடுத்தே அப் பகுதியில் வன்முறைக்கலவரங்கள் ஏற்பட்டன.

கலவரக்காரர்கள் அரசுத் துறை மற்றும் தனியாருக்குச் சொந்தமான சொத்துக்களைச் சேதப்படுத்தி சூறையாடியதுடன் தீ வைத்தனர்.

இந்தக் கலவரத்தில் ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்து அறிவிக்கப்படவில்லை. மாநில அரசு ஊரடங்கு உத்தரவு பிறப்பித்த பின்னரும் வன்முறைகள் முடிவுக்கு வரவில்லை என்று கூறப்படுகிறது.

(ஒ)

# இஸ்ரேலியப் படைகள் அத்துமீறல்; ஐ. நா. பாதுகாப்புச்சபை கண்டனம்!

வாஷிங்ரன், ஒக். 11

பலஸ்தீனர்களுக்கு எதிராக இஸ்ரேல் படைப் பலத்தை அத்துமீறிப் பயன்படுத்தியதற்கு ஐ. நா. பாதுகாப்புச் சபையில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட கூட்டத்தில் அமெரிக்கா கலந்து கொள்ளவில்லை.

கடந்த வாரம் இஸ்ரேலிய எதிர்க்கட்சித் தலைவர் ஜெருசலேமில் இஸ்லாமிய புனிதத் தலம் ஒன்றுக்கு விஜயம் செய்ததை அடுத்து மேற்குக் கரை மற்றும் காஸாப் பகுதிகளில் பலஸ்தீனர்களுக்கும், இஸ்ரேலியப் படைகளுக்குமிடையே பலத்த மோதல்கள் ஏற்பட்டன.

இதில் 80 க்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் உயிரிழந்தனர்.

இந்த மோதல்களின் போது இஸ்ரேலியப் படையினர் பலஸ்தீனர்கள் மீது வான் தாக்குதல் உட்பட கடும் தாக்குதல்களை நடத்தியதாகவும். இது அத்து மீறிய செயல் என்றும் ஐ. நா. பாதுகாப்புச் சபை கண்டனத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது

இதற்கிடையில் ஹிஸ்புல்லா தீவிரவாதிகளால் பணயம் வைக்கப்பட்டுள்ள 3 இஸ்ரேலியப்படையினரை விடுவிக்க அரபாத் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும்— வன்முறை தொடருமானால் பலஸ்தீனர்களுடனான அமைதிப் பேச்சுக்கள் கைவிடப்படும் என்றும் இஸ்ரேலியப் பிரதமர் எகுட் பராக் தெரிவித்துள்ளார்.

(ஒ-8)

## போலந்தில் ஜனாதிபதித் தேர்தல்

வார்சோ, ஒக். 11

போலந்தில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தற்போதையஜனாதிபதி அலெக்ஸாண்டர் வெற்றி பெற்றுள்ளார்.

அவர் 53. 9 சதவீத வாக்குகள் பெற்று இரண்டாவது தடவையாக 5 ஆண்டு கால ஜனாதிபதிப் பதவியை வகிப்பார்.

(ஒ)

## 'போபர்ஸ்' ஊழல் வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல்

புதுடில்லி, ஒக். 11

ராஜீவ் காந்தி சம்பந்தப்பட்ட போபர்ஸ் பீரங்கி பேர ஊழல் தொடர்பாக பிரபல தொழிலதிபர்களான இந்துஜா சகோதரர்கள் மீது துணைக் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்திய இராணுவத்துக்கு 1986 ஆம் ஆண்டு 1437 கோடி டொலர்களுக்கு போபர்ஸ் பீரங்கிகள் வாங்கப்பட்ட போது 64 கோடி ரூபா தரகுத் தொகையாகப் பரிமாறப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு, சோனியாகாந்தியின் உறவினரான குவாத்ரோட்சி உட்பட சிலர் மீது முன்னர் மத்திய புலனாய்வுத்துறை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அதில் விசாரிக்கப்படாத குற்றவாளியாக மறைந்த ராஜீவ் காந்தியின் பெயரும் சேர்க்கப்பட்டுள்ளது.

தற்போது சுவீடனில் உள்ள போபர்ஸ் நிறுவனம் வழங்கியுள்ள கூடுதல் ஆவணங்களின் அடிப்படையில் இந்தியர்களான சர்வதேச தொழிலதிபர்கள் இந்துஜா சகோதரர்கள் மீது மத்திய புலனாய்வுத் துறை துணைக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ஒ-8)

## படைத் தலைவர்களின் பதவிகள் இந்தோனேசியாவில் பறிப்பு!

ஜகார்த்தா, ஒக். 11

இந்தோனேசியாவில் தேசிய பாதுகாப்புப் படையில் அங்கம் வகித்த ராணுவ, கடற்படைத் தலைவர்களை அதிபர் அப்துல்ரஹ்மான் வாஹிட் பதவி நீக்கியுள்ளார். இந்தோனேசிய அரசியல் விவகாரங்களில் பாதுகாப்புப் படைகள் குறுக்கிட்டு அதிகாரம் செலுத்துவது முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் வாஹிட் கூறியுள்ளார்.

சிவிலியன் அரசினால் தாங்கள் கட்டுப்படுத்தப்படுவதைத் தவிர்த்து வந்ததுடன் பதவி அதிகாரப் போட்டிகளில் தங்களுக்குள் பாதுகாப்புப் படைகளின் தலைவர்கள் ஈடுபட்டு வந்ததாகவும், இதனாலேயே பதவி நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது,

முன்னாள் அதிபர் சுகார்ட்டோவின் 32 ஆண்டு கால ஆட்சியில் இந்தோனேசியாவில் எல்லைப்புற மாகாணங்களின் நிர்வாகத்தில் பாதுகாப்புப்படைகள் தங்கள் அதிகாரத்தைச் செலுத்தி வந்தது குறிப்பிடத்தக்கது.

(ஒ-8)

## பாகிஸ்தானை பேச்சுக்களில் சேர்க்க காஷ்மீர் மக்கள் ஆதரவு

ஜம்மு, ஒக். 11

காஷ்மீர்ப் பிரச்சினை தொடர்பான அமைதிப் பேச்சுவார்த்தைகளில் பாகிஸ்தானைச் சேர்க்க பெரும்பான்மையான காஷ்மீர் மக்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இந்தியப் பத்திரிகையான 'அவுட் லுக்' காஷ்மீரில் நடத்திய கருத்துக்கணிப்பொன்றில் இது தெரிய வந்துள்ளது.

காஷ்மீரில் தீவிரவாத நடவடிக்கைகள் அதிகளவில் இடம்பெறும் 4 மாவட்டங்களில் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பில் 50 சதவீதத்திற்கும் அதிகமானவர்கள் அமைதிப் பேச்சுக்களில் பாகிஸ்தானையும் சேர்த்துக் கொள்ள வலியுறுத்தியுள்ளனர்.

(ஒ-8)

### வன்முறையில் ஈடுபட்டு வந்த

# திமோர் மக்கள் படைத் தலைவர் இந்தோனேசியாவில் கைது!

டிலி, ஒக், 11

திமோர் மக்கள் படையின் தலைவர் யூரிகோகுட்ரயை இந்தோனேசியப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தோனேசியாவின் ஆதிக்கத்திலிருந்து கிழக்குத் திமோர் விடுதலை பெற நடந்த போராட்டங்களை நசுக்குவதில் இந்தோனேசிய அரசுக்கு ஆதரவாகச் செயற்பட்ட திமோர் மக்கள் படையினர் கிழக்குத் திமோர் சுதந்திரம் அடைந்த பின்னர் வன்முறைகளில் ஈடுபட்டு வந்தனர்.

இவர்களின் தாக்குதலுக்கு அஞ்சி மேற்குத் திமோரில் தஞ்சமடைந்த கிழக்குத் திமோர் மக்களுக்கு உதவும் பணியில் ஈடுபட்ட ஐ. நா. ஊழியர்கள் கொல்லப்பட்டதற்கும்—

12 பேர் உயிரிழந்த கிழக்குத் திமோர் சுதந்திரப் போராட்டத் தலைவர் வீடு தாக்கப்பட்ட சம்பவத்திற்கும் மக்கள் படையினரே காரணம் எனக் கூறப்படுகிறது.

சர்வதேச சமூகம் மக்கள் படையினரைக் கட்டுப்படுத்தும்படி இந்தோனேசிய அரசுக்கு நெருக்குதல் அளித்து வந்தது.

இதனையடுத்து மக்கள் படைத் தலைவர் குட்ரஸ் தங்கும் விடுதி ஒன்றில்வைத்து இந்தோனேசியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

(ஒ-8)

## பிஜி இந்தியர் அதிபராக எதிர்ப்பு

சுவா, ஒக். 11

பிஜியில் இந்திய வம்சாவளியினர் அரசின் தலைமைப் பதவியை வகிக்க ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்று இடைக்கால அதிபராக உள்ள லைபேனியா கராசே தெரிவித்துள்ளார்.

(ஒ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

**Super Cup**-50 (லான்சா மொடல்) மோட்டார் சைக்கிள் (பெண்கள் ஓடுவதற்கு தகுதியானது) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.குணபாக்கியம் (சங்கீத ஆசிரியை), தொல்புரம் கிழக்கு, சுழிபுரம். (79066)

## இறைச்சிக்கோழி விற்பனை

**Broiler** இறைச்சிக்கோழி சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் பெற்றுக்கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (79338)

## அறைகள் வாடகைக்கு

யாழ்.நகரில் மேலும் இரண்டு அறைகள் வாடகைக்கு உண்டு. பார்வையிடும் நேரம திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி 12.00-4.00 மணி வரை. ந.விக்கினேஸ்வரன் ஆச்சாரி 426(302) காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (79331)

## படிவம்

தொழில்நுட்பக் கல்லூரிகளின் அனுமதிக்கான விண்ணப்பம் 2001 ஆம ஆண்டு விற்பனையாகின்றது. படிவம் அளவு **13"x 8"** விலை ரூபா 2.50. மொத்த வியாபாரிகளுக்கு கழிவு உண்டு. பாரதி ,430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021-3081 (C/13321)

## தவறிவிட்டது

அம்பலவாணர் இராஜகோபாலகிருஷ்ணன் என்பவருடைய தே.அ.அ.இல.610835139v, வி.அ.அ.இல. 0906026457 என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் அ.இராஜகோபாலகிருஷ்ணன் (செட்டி), உடுவில் தெற்கு, பாலாவோடை, சுன்னாகம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (79344)

## தவறிவிட்டது

ப.ஆனந்தபாஸ்கரன், துரைவீதி, தாவடி வடக்கு, கொக்குவில் என்பவருடைய ஜெமகா மேற் 90 சிவப்பு நிறமுடைய மோட்டார் சயிக்கிள் இல. **NLGA** 8688 செசி இல. **VAOT** 329601 இலக்கமுடைய இணுவில் கந்தசாமி கோயிலில் 08.10.2000 பி.ப 5.30 மணியளவில் களவுபோய் விட்டது. கண்டுபிடித்துத் தருபவருக்கு சன்மானம் வழங்கப்படும். (79345)

## DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள், பல்கலைக்கழக நடைமுறைகளுக்கு அமையக் கட்டிக் கொடுக்கப்படும். (இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் ரூபா 350/-). தொடர்பு: பாரதி, 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி. 3081. (C/13122)

## இளைஞன் காயம்

வடமராட்சி கிழக்கு வல்லிபுர ஆலய வடக்கு வீதிப்பகுதியில் நேற்று முற்பகல் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் ஆலயத்துக்கு வந்திருந்த ஐங்கரன் (வயது 21, அல்வாய் வடக்கு) என்பவர் காயமடைந்தார். (ஐ-109)

## திருத்தம்

**வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி, வேலைகளுக்கான**

கேள்வி அறிவித்தல

உதயன் 03-10-2000ஆம திகதி இதழில் 9ஆம் பக்கத்தில் வெளிவந்த மேற்படி விளம்பரத்தில் மூன்றாவது பந்தியில கேள்விப்பத்திரத்தின் இரண்டு பிரதிகளையும் உரிய இடங்களில "28.10.2000ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கிடையில் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்" என்று தவறுதலாக வெளிவந்துவிட்டது அதனை *"23.10.2000ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கிடையில கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்"* எனத் திருத்தி வாசிக்கவும். (C/13175)

மகிழ்ச்சிதரும்

## மகத்தான தீபாவளி மலிவுவிற்பனை

**10-10-2000 முதல் 26-10-2000 வரை**

- தரமான புடைவை வகைகள்
- மனதைக் கொள்ளைகொள்ளும் வர்ணங்கள்
- நவீன டிசைன்கள்

விசேட விலைக்கழிவு வாடிக்கையாளருக்கு!

## லைடன் புடைவை நிலையம்

410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.P 2381 (c/13317)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இன்று, மிக்ஷர், பகோடா, காராப்பூந்தி, முறுக்கு, தட்டுவடை மற்றும் சிற்றுண்டி உணவுவகைகளைத் திறம்படத் தயாரிப்பதில் இன்றைய முன்னோடிகள்

## மல்லிகா மிக்ஷர் தொழிலகம்

- மீண்டும், மீண்டும், சுத்திச் சுத்தி வந்திடச் செய்யும் !
- கேட்டுக் கேட்டு வாங்கிட வைக்கும் !!
- சாப்பிடச் சாப்பிடச் சாப்பிடச் சொல்லும் !!!

மல்லிகாவின் உற்பத்திகள் யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களுக்குக் கிடைத்த சிறப்பான வலம்புரிச் சங்கு. எதிர்வரும் தீபாவளித் தினத்தை முன்னிட்டு எமது அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள், விற்பனையாளர்கள் அனைவருக்கும் கொள்வனவுத் தொகைக்கேற்ப மகிழ்ச்சியுடன் கவர்ச்சியான விலைத்தள்ளுபடி வழங்குகின்றோம். உங்கள் இல்லங்களில் நடைபெறும் பிறந்தநாள், பூப்புனித நீராட்டு விழாக்கள், திருமண வைபவங்கள், காரியாலய, களியாட்டு விழாக்களுக்குத் தேவையான எமது உற்பத்திகளைப் பெற்றுக் கொள்ளத் திரண்டு வாருங்கள்! அள்ளிச் செல்லுங்கள்!!

**மேலும் எங்களிடம்:**

**▣ லாவணியா வனிலாத் தேயிலை, கோப்பி ▣ பவானி கச்சான் அலுவா, எள்ளுருண்டை ▣ லீலா வெதுப்பக பிஸ்கற்வகைகள் ▣ குளுக்கோஸ, மாஸ்மலோஸ், எள்ளுப்பாகு ▣ மல்லிகா பண்ணை முட்டைகளையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.**

## மல்லிகா மிக்ஷர் மாளிகை

அறிமுக சிறப்பு மலிவு விற்பனை நிலையம்,

இலக்கம்.149, மின்சாரநிலைய வீதி, (பஸ்நிலையத்துக்கு அருகில்), யாழ்ப்பாணம்.

(C/13326)

# அந்தியேட்டி அழைப்பு

**மீசாலை வடக்கினை வசிப்பிடமாகவும், கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும் கொண்ட**

அமரர்

டாக்டர் **அப்பாக்குட்டி செல்வராசா** (R.M.P) அவர்களின்

**31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி நிகழ்வும்**

**12.10.2000 வியாழக்கிழமை நடைபெறும்.**

அந்தியேட்டிக் கிரியைகள் காலை 6.00 மணியளவில் இல்லத்தில் நடைபெறுவதுடன் மதியம் 12.00 மணியளவில் இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார் உறவினர்களை கேட்டுக்கொள்கொள்ளுகின்றோம்.

(தனிப்பட்ட முறையில் அழைப்புத் தர முடியாமைக்கு வருந்துகின்றோம்)

*களச்சியத்தோட்டம்,*
*கரவெட்டி கிழக்கு,*
*கரவெட்டி.* (79324)

திருமதி சாந்தகலா ஜெகநாதன (மகள்)
திரு. கந்தையா ஜெகநாதன் (மருமகன்)
திரு. க.செல்வரத்தினம (மைத்துனன், போட்டோ செல்வம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கடந்த 18 வருடங்களாக சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரையை நடத்தி வந்துள்ளது. இவ்வருட 19ஆவது நினைவுப் பேருரையை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான துர்க்கா துரந்தரி கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் 'சைவசித்தாந்தம் காட்டும் வாழ்க்கை நெறி' எனும் தலைப்பில் 2000.10.13ஆம் திகதி மாலை 3.00 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நிகழ்த்தவுள்ளார். இந்த நினைவுப் பேருரை தமிழில் நடைபெறும்.**

ஆர்வலர்கள் அனைவரும் அழைக்கப்படுகின்றனர்.

(C/13333) **துணைவேந்தர்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

**தோற்றம்** 16 - 08 - 1916



**மறைவு** 11 - 09 - 2000

அமரர்

## சின்னப்பு செல்லத்துரை

எங்கள் குடும்பத் தலைவர் அமரர் சின்னப்பு செல்லத்துரை அவர்களின் மறைவுச் செய்திகேட்டு பல வழிகளிலும் உதவியவர்களுக்கும், இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று 11-10-2000 புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**தகவல்:**
செ.சண்முகநாதன்(K.V.S) (மகன்)
செ.சிவகுமார் (பவா) (மருமகன்)
*V.C.லேன்,*
*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.*

**மனைவி,**
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

(79332)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

வடகோவை

**மலர்வு** 19 - 10 - 1918



**உதிர்வு** 04 - 10 - 1998

## கவிஞர் க.இ.சரவணமுத்து

(முன்னாள் ஆசிரியர்,உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்)

சரவணமுத் துப்பெரியோன் சாரதா எனும்பெயரில்
அருமைபெறு கவிசெய்தும் அருமந்த செய்திகளை
நிரைவகுத்தே நூல் தந்தும் நிகரற்ற பணிபுரிந்தான்
திருவருளுக் காளானான் திசையெல்லாம் புகழ்வீச.

அவனியை அவர்விட்டு ஆண்டிரண்டே யானாலும்
அவர் நினைவு எம்மனதில் ஆழமாய்ப் பதிந்ததுகாண்
நவமான உலகினிலே நல்லாசா னாய்த்திகழ்ந்தார்
தவமுதல்வர் நம்மவர்க்குத் தயாபரனைப் பணிகின்றோம்.

*'மகேஸ்வரம்"*
*உரும்பிராய்தெற்கு,*
*உரும்பிராய்.* (79322)

**மக்கள், மருமக்கள்,**
**பேரர், சகோதரர்கள்.**

# மாருதியின் மைந்தனுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்



## விஸ்வலிங்கம் ஜோசப் ரஞ்சித்குமார்

(3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்)

ஆண்டவன் படைப்பு 20-09-1978

அநியாய அழிப்பு 10-10-2000

மனதினிலே நிறைந்திருந்தாய்!
மறைவாலே துயருற வைத்தாய்!
மனக்கோட்டை கட்டி
வைத்திருந்தோம்!
மணல் கோட்டையாய்
உடைந்ததடா
கலந்துரையாட வந்திருந்தோம்!
கதிகலங்கி நின்றிருந்தோம்!

உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (12.10.2000) அவரது இல்லத்தில் பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும்.

மாருதி ரெக்ஸ்
சிற்றி ரெக்ஸ் & ரெயிலேர்ஸ்
ஸ்தாபனத்தினர்

(C/13342)


# வீரப்பனைச் சந்திக்க நெடுமாறன் செல்கிறார்

சென்னை,ஒக்.11

கன்னட நடிகர் ராஜ்குமாரை மீட்கும் முயற்சியில் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் வீரப்பனிடம் தூதராகச் சென்றுள்ளார்.

50 நாள்களுக்கும் மேலாக சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பனால் கடத்திச் செல்லப்பட்டு பணயம் வைக்கப்பட்டுள்ள ராஜ்குமார் உட்பட இருவரை மீட்கும் முயற்சியில் வீரப்பனைச் சந்திக்க அரசுத்தூதராகச் சென்றுள்ள 'நக்கீரன்' கோபாலுடன் இணைந்து பழ.நெடுமாறன், பேராசிரியர் கல்யாணி மற்றும் வி.சுகுமாரன் ஆகியோர் சென்றுள்ளதாகத் தமிழகப் பொலீஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாகப் பழ.நெடுமாறன் வெளியிட்ட அறிக்கையில் -

தமிழக, கர்நாடக மாநிலங்களின் முதல்வர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்கவே தாம் காட்டுக்குச் செல்வதாகவும் -

இரு மாநிலங்களிலும் உள்ள மனித நேய அமைப்புகள் தமக்கு ஒத்துழைப்புத் தருவார்கள் என்று நம்புவதாகவும் - தெரிவித்துள்ளார். (ஒ)


## ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானம்

*தர்மகர்த்தா சபையினரின்*

### விசேட அறிவித்தல்

*மேற்படி ஆலயத்தின் அருகில் எறிகணை வீழ்ந்து எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை.*

**நாளை சப்பறமும் அடுத்த மூன்று நாள்கள் தேர், தீர்த்தம், பட்டுத் தீர்த்தத் திருவிழாக்களும் வழமைபோல் நடைபெறும் எனவும் தேவையற்ற வதந்திகளை பக்தகோடிகள் நம்பவேண்டாம் என்றும் நிர்வாகத்தினர் கேட்டுக் கொள்கின்றார்கள்.**

**எனவே பக்தகோடிகள் திருவிழாக்களுக்கு வந்து மாலவனின் அருளைப் பெற்றுய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.**

(C/13341) **தர்மகர்த்தா சபையினர்.**


# மரண அறிவித்தல்கள்

## கந்தசாமி இராமநாதன்

(உரிமையாளர்,கந்தசாமி அன்சன்ஸ் நகைக்கடை,206,K.K.S.வீதி, யாழ்ப்பாணம்.)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி இராமநாதன் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி - இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் கந்தவனம் - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், சிவராஜேஸ்வரி (பூங்கோதை)யின் அன்புக் கணவரும் ரஜிப்பிரியா, சுபாசினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*நிரந்தர முகவரி:*
*35,1ஆம் குறுக்குத் தெரு,*
*கொழும்புத்துறை,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
பூங்கோதை (மனைவி),
**பிள்ளைகள்.**

தற்காலிக முகவரி:
*முருகமூர்த்தி ஒழுங்கை,*
*நவாலி.*

(79355)

## ஐயாத்துரை துரைராஜா

(அதிபர், வண்/நாவலர் மகாவித்தியாலயம்)

நல்லூர் செட்டித்தெருவைப்பிறப்பிடமாகக் கொண்டவரும் வண்ணார்பண்ணை ஐயனார் கோயிலடியை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய ஐயாத்துரை துரைராஜா அவர்கள் 09-10-2000 திங்கட்கிழமை மாலை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - பொன்னம்மா தம்பதிகளின் பாசமிகு அருமைமகனும், திருமதி கௌரி துரைராஜாவின் (இளைப்பாறிய ஆசிரியை, யா/வைத்தீஸ்வராக் கல்லூரி) பாசமிகு அன்புக் கணவரும், திவாகரன், சசிகரன்(சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவர்கள்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராஜரட்ணம், செல்வரட்ணம், கனகரட்ணம், தவமணிதேவி, ஆகியோரின் அன்புச் சகோதரனும், சந்திரா, ரஞ்சிதமலர், மிதுளா, லோகேஸ்வரன், திருமதி கமலாசினி இராசையா, திருமதி மீனலோஜினி தம்பையாபிள்ளை, காலஞ்சென்ற திருமதி ஞானரஞ்சனி செல்லத்துரை, காலஞ்சென்ற திருமதி தயானி ராஜேந்திரன், தி.ஜெகதீஸன், தி.கார்த்திகேயன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11-10-2000) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*495, கே.கே.எஸ்.வீதி,*
*கட்டர்தெரு,*
*யாழ்ப்பாணம்.* (79359)

தகவல்:
திருமதி கௌரி துரைராஜா
(மனைவி)

## திருமதி பொன்னம்மா சிவபாதசுந்தரக் குருக்கள்

கட்டுவனைச் சேர்ந்த அமரர் சு.சிவபாதசுந்தரக் குருக்கள் அவர்களின் மனைவி பொன்னம்மா நேற்று (10-10-2000) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சி.நீலகண்டக்குருக்கள், சி.ஆறுமுகக் குருக்கள், சி.அருணாசலக் குருக்கள், சி.கைலாசநாதக் குருக்கள், சி.மகேஸ்வரக் குருக்கள், திருமதி மகேஸ்வரி தாயம்பிள்ளை, திருமதி சு.இராஜராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (11-10-2000) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று சொக்குவில் இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'மாருதம்'*
*பலாலி வீதி,*
*திருநெல்வேலி.*

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
(79361)

# ஊர்காவற்றுறை வாக்குகளை முடிவுகளில் சேர்க்கக் கூடாது

## ஆணையாளரிடம் கூட்டணி ஆட்சேபம்

ஊர்காவற்றுறை தேர்தல் தொகுதியின் வாக்களிப்பு நிலையங்களில் அளிக்கப்பட்ட வாக்குகளை யாழ். மாவட்டத்துக்கான தேர்தல் முடிவுகளில் சேர்த்துக்கொள்ள வேண்டாம் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவர் வீ. ஆனந்தசங்கரி தேர்தல் ஆணையாளரிடம் நேற்று அவசரக் கோரிக்கை விடுத்திருந்தார்.

ஊர்காவற்றுறைத் தொகுதியில் உள்ள பல வாக்களிப்பு நிலையங்களுக்குத் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் நியமிக்கப்பட்ட தேர்தல் முகவர்கள் சென்றபோது, ஈ.பி.டி.பியின் ஆதரவாளர்கள் எனக் கருதப்படுவோரால் திருப்பி அனுப்பப்பட்டனர். கூட்டணி முகவர்கள் பயமுறுத்தப்பட்டும் உள்ளனர்.

ஆயுதக் குழுக்களிடமிருந்து ஆயுதங்களைக் களையுமாறு உங்களையும் ஜனாதிபதியையும் பல தடவைகள் கேட்டிருந்தோம். ஆனால அதற்குச் செவிசாய்க்கப்படவில்லை.

இதனை ஆட்சேபிக்கும் வகையில் ஊர்காவற்றுறைத் தொகுதிக்கான வாக்கு எண்ணும் நிலையங்களுக்கு நம் முகவர்களை நியமிக்கவில்லை -

மேற்படித் தொகுதியில் வாக்காளர்கள் தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான சுதந்திரம் வழங்கப்படவில்லை என்பதால் அங்கு அளிக்கப்பட்ட வாக்குகளை தேர்தல் முடிவுகளில் சேர்க்கவேண்டாம்.

இப்படி தேர்தல் ஆணையாளருக்கு நேற்று அனுப்பிய அவசரக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(அ)

### 25சத வீத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிருந்த வாக்களிப்பு நிலையங்களில் மிகக் குறைந்த எண்ணிக்கையினரே வாக்களித்தனர்.

வாக்காளர்களுக்கு இலவச போக்குவரத்து வசதிகள் ஒழுங்கு செய்யப்பட்ட போதும் சில அரசியல் கட்சிகள் தமது வாகனங்களில் அவர்களை ஏற்றியிறக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டன.

யாழ்.இந்து, யாழ்.வைத்தீஸ்வரா போன்ற கல்லூரிகளில் அமைக்கப்பட்ட வாக்களிப்பு நிலையங்களில் கள்ள வாக்குப் போட்ட சிலர் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

மாலை 4மணிக்கு வாக்களிப்பு முடிவடைந்ததும் சிரேஷ்ட தலைமை தாங்கும் அதிகாரிகள் வாக்குச்சீட்டுகள் அடங்கிய வாக்குப்பெட்டிகளை எடுத்துச் சென்று யாழ்.செயலகத்தில் ஒப்படைத்தனர்.

### குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேலி, புன்னாலைக்கட்டுவன் போன்ற பகுதிகளிலும் நேற்று ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன.

இச்ஷெல்களினால் சேதம் ஏதும் ஏற்படாத போதும் நீர்வேலிப் பகுதியல வைக்கோல சூடு ஒன்று தீப்பற்றி எரிந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

புன்னாலைக்கட்டுவனில் வீழ்ந்த ஷெல்லினால் அதே இடத்தைச் சேர்ந்த சின்னத்துரை விஸ்வநாதன் (வயது 69) என்பவர் காயமடைந்தார்.

யாழ்.பொஸ்கோ பாடசாலைச் சுற்றாடலில் வீழ்ந்த ஷெல்லுக்கு அரியரட்ணம் சிம்சன் (வயது21) என்பவர் காயமடைந்தார்.

நேற்று வலிகாமம் பகுதியில் இருந்து படையினரும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளை நோக்கி விட்டுவிட்டு ஷெல்தாக்குதல்களை மேற்கொண்டனர்.(ஐ-5-9-10-ரி-15-17-109-173-139)

### பொதுமக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னணி (ஜே.வி.பி) உருவாகுவது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது என்று செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

எப்படி என்றாலும் ஜே.வி.பி. மற்றும் உதிரிக் கட்சிகளின் ஆதரவுடன்தான் ஐக்கியதேசியக் கட்சியோ, பொதுமக்கள் ஐக்கிய முன்னணியோ ஆட்சி அமைக்க முடியுமென்று அவர்கள் கருத்து வெளியிட்டனர்.

தேர்தல் முடிவுகள் தொடர்பான தெளிவான நிலைப்பாடு இன்று காலை 10 மணியளவில் தெரியுமென்று அவர்கள் குறிப்பிட்டனர்.

நேற்று முதலாவது தேர்தல் முடிவு காலி தேர்தல் மாவட்டத்தில் பலப்பிட்டித் தொகுதியில் வெளியானது. பொதுஜன ஐக்கிய முன்னணி இத்தொகுதியில் வெற்றி பெற்றிருந்தது.

பத்திரிகை அச்சுக்குப் போகும் வரை தொகுதி ரீதியாகக் கிடைத்த தேர்தல் முடிவுகள் வருமாறு:-

#### காலி மாவட்டம்

பலப்பிட்டி

| | |
|---|---|
| ☆ பொ.ஐ.மு. | 15,719 |
| ☆ ஐ.தே.க. | 14,194 |
| ☆ ஜே.வி.பி | 2,478 |

#### வன்னி மாவட்டம்

முல்லைத்தீவு

| | |
|---|---|
| ☆ பொ.ஐ.மு. | 439 |
| ☆ ஐ.தே.க. | 182 |
| ☆ ஜே.வி.பி. | 18 |
| ☆ லிபரல் | 04 |
| ☆ சிஹல உறுமய | 03 |
| ☆ பூமி புத்ர | 01 |
| அளித்த வாக்குகள் | 682 |
| நிராகரித்தது | 30 |
| செல்லுபடி | 652 |
| பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் | 53,054 |

#### மாத்தளை மாவட்டம்

ரத்தோட்ட

| | |
|---|---|
| ☆ பொ.ஐ.மு. | 27,615 |
| ☆ ஐ.தே.க. | 21,331 |
| ☆ ஜே.வி.பி. | 2,138 |
| ☆ புதிய இடதுசாரி | 660 |
| ☆ சிஹல உறுமய | 391 |
| ☆ பிரஜைகள் முன்னணி | 108 |

#### பதுளை மாவட்டம்

பசறை

| | |
|---|---|
| ☆ ஐ.தே.க. | 15,491 |
| ☆ பொ.ஐ.மு. | 13,848 |
| ☆ இ.தொ.கா. | 4,131 |
| ☆ ஜே.வி.பி. | 912 |
| ☆ புதிய இடதுசாரி | 216 |

ஹாலி - எல

| | |
|---|---|
| ☆ பொ.ஐ.மு. | 17,588 |
| ☆ ஐ.தே.க. | 17,338 |
| ☆ ஜே.வி.பி. | 1802 |
| ☆ இ.தொ.கா. | 944 |
| ☆ தே.ஐ.மு. | 293 |

வெலிமட

| | |
|---|---|
| ☆ ஐ.தே.க | 19,377 |
| ☆ பொ.ஐ.மு. | 18,661 |
| ☆ தே.ஐ.மு. | 2,577 |
| ☆ ஜே.வி.பி | 1835 |
| ☆ இ.தொ.கா. | 617 |
| ☆ புதிய இடது சாரி | 161 |
| ☆ சிஹல உறுமய | 152 |

# லொறியின் உரிமையாளரும், சாரதியும் கைது

யாழ்ப்பாணம்,ஒக்.11

யாழ்ப்பாண நகரில் காங்கேசன் துறை வீதியில், இலங்கை மின்சார சபை தலைமையகச் சுவருடன் மோதி நேற்றுமுன்தினம் விபத்துக்குள்ளான லொறியின் சாரதியும் அதன் உரிமையாளரும் யாழ்.பொலீஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களான வண்ணை நாவலர் மகா வித்தியாலய அதிபர் ஐயாத்துரை துரைராஜா (வயது 57), யோகநாதன் கியூபேட் (வயது 29), விஸ்வலிங்கம் ரஞ்சித் (வயது 22) ஆகியோரின் [illegible] விசாரணைகள் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று [illegible] பற்றன.

யாழ். [illegible]வட்ட நீதிவான் இ.த. விக்னராஜா விசாரணைகளை மேற்கொண்டார்.

லொறி உரிமையாளரான அப்துல் காதர் மொபீன் என்பவரும் லொறியைச் செலுத்தி வந்தவர் எனக் கூறி நீதிவான் முன் சாட்சியம் அளித்த ஆறுமுகம் வேலாயுத பிள்ளை என்பவரும் நீதிவானின் உத்தரவின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

இருவரையும் எதிர்வரும் 23 ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

மரண விசாரணையின் பின் உயிரிழந்த மூன்று பேரின் சடலங்களும் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டன.

அதே சமயம் இந்த விபத்தில் மரணமான யோகநாதன் கியூபேட்டின் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் நேற்று யாழ். ஆஸ்பத்திரி வளாகத்தில் பெரும் எண்ணிக்கையில் திரண்டிருந்தனர். நீதியான விசாரணை நடத்தப்படவேண்டும் என்று இவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

அதேசமயம் இந்த விபத்தின் போது சிறுகாயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட லொறிச் சாரதி எனக் கூறப்பட்டவரும் அவரது உதவியாளர் எனக் கூறப்பட்டவரும் நேற்றுமுன்தினம் மாலையே அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டனர் என்று வைத்தியசாலை நிர்வாகத்தினால் யாழ். பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். ஆஸ்பத்திரியில் இடம் பெற்ற மரண விசாரணையின்போது குறித்த லொறியில் பயணம் செய்த யாழ். மாவடி வீதி, வெள்ளாந் தெருவைச் சேர்ந்த இரத்தினம் ஸ்ரீகரன் (வ[illegible]) என்பவர் தெரிவித்ததாவது:

[illegible]த்துக்குள்ளான லொறியில் கிளீனர் ஆசனத்தில் சாரதிக்கு மூன்றாவது இடத்தில் நான் இருந்து சென்றேன். லொறி உரிமையாளரின் கடையில் இருந்து இந்த லொறி யாழ். காங்கேசன்துறை வீதி ஊடாகக் கொக்குவிலுக்குச் சென்றுகொண்டிருந்தது. லொறி மிகவும் வேகமாகச் சென்று கொண்டிருந்தது. மனோகராஸ் தியேட்டர் கழிந்த பின்னர் இலங்கை மின்சார சபை உள்ள இடத்தில் இருந்து திடீரென ஒரு பக்கமாக இழுத்துச் சென்றது. பின்பு மின்சார சபை மதிலுடன் - நாவலர் மகாவித்தியாலய மதிலுடன் - மோதித் தடம் புரண்டது. அந்த நேரம் லொறியை அதன் உரிமையாளரான மொபீன் ஓட்டிக் கொண்டு வந்தார்.

லொறி தடம் புரண்ட பின்னர் நான் அதனுள் அகப்பட்டுக் கொண்டேன். லொறிக் கம்பிக்குள் எனது இடது கால் செருகிக் கிடந்தது. கண்ணாடிகள் உடைந்து எனது உடலில் காயங்கள் ஏற்பட்டிருந்தன.

பின்பு அங்கு வந்தவர்கள் மரங்களின் உதவியுடன் லொறியை நகர்த்தியபோது அதிலிருந்து விடுபட்டு நான் வெளியே வந்தேன். லொறியைச் செலுத்தி வந்த மொபீன் வீதியின் அருகில் இருந்த புல் தரையில் கிடந்தார் - என்றார். (இ-9-ரி)

### குடாநாட்டின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடத்திச் சென்றதாக ஐக்கிய தேசியக் கட்சியினர் தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்துள்ளனர். தாக்கப்பட்ட காயங்களுடன் அவர்களில் பலர் நேற்றுமாலை விடுவிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

* வேலணை, புங்குடுதீவுப் பகுதிகளில் உள்ள வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று திரும்பிய தமது அமைப்பின் ஆதரவாளர்களும், வல்வெட்டித்துறை நகரசபை பிரதித் தலைவர் சந்திரசேகரமும் வேலணையில் வைத்து ஈ.பி.டி.பி. ஆதரவாளர்களால் தாக்கப்பட்டனர் என்று ரெலோ அமைப்புத் தெரிவித்துள்ளது.

### வாக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலக அதிகாரிகள் மேற்கொண்டிருந்தனர். அங்கு பாடசாலை மண்டபங்களுக்கு விசேட மின் வசதிகளும் செய்யப்பட்டன. எனினும் நேற்று மாலை செயலகப் பகுதியில் பதற்றம் தணிந்து நிலைமையில் ஓரளவு முன்னேற்றம் காணப்பட்டதை அடுத்து வாக்கு எண்ணும் நிலையத்தை இடம்மாற்றும் திட்டத்தை அதிகாரிகள் கைவிட்டனர். நேற்றிரவு வாக்குகளை எண்ணும் பணி யாழ்.செயலகத்திலேயே மும்முரமாக இடம்பெற்றது.

குடாநாட்டில் தோன்றும் சூழ்நிலையைப் பொறுத்து - அவசியம் ஏற்படும் பட்சத்தில் - வாக்கு எண்ணும் நிலையத்தை வேறு ஓர் இடத்திற்கு மாற்றுவதற்கு யாழ்.தெரிவத்தாட்சி அலுவலரான அரச அதிபருக்கு தேர்தல் ஆணையாளர் அனுமதி வழங்கியிருந்தது தெரிந்ததே.

### ஈ.பி.டி.பி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.மாவட்டத்தில் கணிசமானோர் வாக்களித்ததாக முதலில் செய்திகள் வெளியாகியிருந்த போதிலும் ஆக ஒரு லட்சத்து 20 ஆயிரம் பேரே மொத்தமாக வாக்களித்திருப்பதாக இன்று அதிகாலை கிடைத்த யாழ். செயலகத் தகவல்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணத்தில் முன்னணி இடத்தைப் பெறும் கட்சிக்கு நான்கு ஆசனங்கள் வரையே கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியும் என வாக்கு எண்ணும் பணியில் ஈடுபட்டுள்ள அதிகாரி ஒருவர் சொன்னார்.

### ஸ்ரீமாவோ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீமாவின் மறைவு குறித்து எதிர்வரும் வெள்ளி, சனிக்கிழமைகள் துக்கதினங்களாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3-7)

# தபால் மூல வாக்களிப்பு முடிவு

யாழ்ப்பாணம்,ஒக்.11

நேற்றிரவு முற்கொண்டு வெளியான தபால் மூல வாக்களிப்பு முடிவுகள் சில வருமாறு:-

#### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| ★ த.வி.கூ. | 518 |
| ★ ஈ.பி.டி.பி. | 380 |
| ★ தமிழ்க் காங்கிரஸ் | 288 |
| ★ ஐ.தே.க. | 74 |
| ★ தே.ஐ.மு. | 02 |
| ★ ஐ.ம.வி.மு. | 49 |
| ★ ருகுணு கட்சி | 01 |
| ★ சிஹல உறுமய | 01 |
| ★ சுயேச்சை 1 | 02 |
| ★ சுயேச்சை 2 | 32 |
| ★ சுயேச்சை 3 | 20 |
| ★ சுயேச்சை 5 | 01 |
| ★ சுயேச்சை 6 | 28 |
| அளிக்கப்பட்டவை | 1418 |
| நிராகரித்தது | 71 |
| செல்லுபடியானவை | 1413 |

#### வன்னி

| | |
|---|---|
| ★ ரெலோ | 518 |
| ★ த.வி.கூ. | 451 |
| ★ பொ.ஐ.மு. | 424 |
| ★ ஐ.தே.க. | 406 |

#### மாத்தளை

| | |
|---|---|
| ★ பொ.ஐ.மு. | 3608 |
| ★ ஐ.தே.க. | 3020 |
| ★ ஜே.வி.பி. | 623 |
| ★ சிஹல உறுமய | 105 |
| ★ பூமி புத்ர | 14 |
| ★ த.வி.கூ. | 02 |

#### மட்டக்களப்பு

| | |
|---|---|
| ★ த.வி.கூ. | 1195 |
| ★ ஐ.தே.க. | 676 |
| ★ தே.ஐ.மு. | 631 |
| ★ பொ.ஐ.மு. | 454 |
| ★ தமிழ்க் காங்கிரஸ் | 161 |

#### இரத்தினபுரி

| | |
|---|---|
| ★ பொ.ஐ.மு. | 4191 |
| ★ ஐ.தே.க. | 2947 |
| ★ ஜே.வி.பி. | 662 |
| ★ புதிய இடதுசாரி முன்னணி | 132 |

#### அநுராதபுரம்

| | |
|---|---|
| ★ பொ.ஐ.மு. | 9130 |
| ★ ஐ.தே.க. | 6345 |
| ★ ம.வி.மு. | !173 |
| ★ தே.ஐ.மு. | 249 |

#### நுவரெலியா

| | |
|---|---|
| ★ பொ.ஐ.மு. | 3258 |
| ★ ஐ.தே.க. | 2735 |
| ★ ம.வி.மு. | 362 |
| ★ சிஹல உறுமய | 54 |

#### திருமலை

| | |
|---|---|
| ★ பொ.ஐ.மு. | 1964 |
| ★ ஐ.தே.க. | 1638 |
| ★ த.வி.கூ. | 459 |
| ★ தமிழ்க் காங்கிரஸ் | 152 |
| ★ ஈ.பி.டி.பி. | 80 |

# மீன் பிடிக்கச் சென்ற இருவர் மின்னல் தாக்கி மரணம்!

## சடலங்கள் கடலில் இருந்து மீட்பு!!

யாழ்.குடாக்கடலில் மீன்பிடிக்கச் சென்ற சமயம் மின்னல் தாக்கி இரு இளைஞர்கள் உயிரிழந்தனர்.

இவர்களின் சடலங்கள் கடலில் இருந்து மீட்கப்பட்டு நேற்று இரவு யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டன.

குருநகர், மத்திய மேற்கு வீதியைச் சேர்ந்தவர்களான ஸ்ரினிஸ் லோஸ் வரதராஜா (வயது - 30), மேயா அன்ரன் பொலிமன் (வயது 30) ஆகியோரே இறந்தவர்களாவர்.

பிரஸ்தாப இளைஞர்கள் இருவரும் நேற்றுமுன்தினம் காலை 7 மணிக்கு தொழிலுக்குச் சென்றதாகவும், எனினும் மாலைவரை கரை திரும்பாததை அடுத்து உறவினர்கள் அவர்களைத் தேடி கடலுக்குச் சென்றனர் என்றும் அச்சமயம் அவர்கள் இருவரும் மின்னல் தாக்கிய நிலையில் உடல் கருகி உயிரிழந்த நிலையில் காணப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மரண விசாரணைகளின் பின் சடலம் உறவினர்களிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டது. (இ-5-9-17-139-ரி)

## மட்டக்களப்பில் 3 தொகுதிகளில் கூட்டணி முன்னணியில்

மட்டக்களப்புத் தேர்தல் மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி 3 தொகுதிகளிலும் முன்னணியில் இருக்கின்றது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

கல்குடா, மட்டக்களப்புத் தொகுதிகளில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு அடுத்த நிலையில் முஸ்லீம் காங்கிரஸ் உள்ளதாகவும் -

பட்டிருப்புத் தொகுதியில் கூட்டணிக்கு அடுத்த நிலையில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி உள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது.(இ-3)


ஈசன் கல்வி நிலையம்

கே.கே.எஸ்.வீதி, கோண்டாவில்.

அனேகமான மாணவர்களினதும் பெற்றோர்களினதும் வேண்டுகோளுக்கு இணங்க எமது வழமையான ஆசிரியர் குழுவுடன் ஆரம்பமாகின்றது.

AL 2000 Day Class

கலைவர்த்தகப் பிரிவுகள்

| | | | |
|---|---|---|---|
| வணிகக்கல்வி | : திரு. பசில் | தமிழ் | : திரு. லிங்கம் |
| கணக்கீடு | : திரு. பாலவாசன் | இ. நாகரிகம் | : திரு. சுரேஸ் |
| பொருளியல் | : திரு. மோகன் | நாட். அரங்கு | : திரு. சக்தியா |
| வணி. புள்ளிவிவரவி. | : திரு. தவசேகர் | புவியியல் | : திரு. சிவகரன் |
| அளவையியல் | : திரு. ஜெயகரேஸ் | பொதுவினா | : திரு. தவசேகர் |

ஆரம்பம் : 12.10.2k (வியாழன்) 9.00 a.m

குறிப்பு: அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையினால் பதிவுகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

(79297) - நிர்வாகி

நாவலர் கல்வி நிலையம்

ஆனைப்பந்தி - யாழ்ப்பாணம்

A/L 2001, 2002

கணிதப் பிரிவு நடைபெறுகின்றது.

* Organic

Mon. / Thu. } 4.30 p.m - 5.30 p.m

12.10.2000இல் ஆரம்பமாகின்றன.

CHEMISTRY

அன்பு (79357)

கருத்தரங்கு

| | |
|---|---|
| பொருள் | : 'மாணவர் ஆளுமையில் கல்வி' |
| வழங்குபவர் | : அருட்திரு. S.J. இராஜநாயகம், இயக்குநர் 'அகவொளி' |
| காலம் | : 12. 10. 2000 (வியாழன்) |
| நேரம் | : 3. 30 (புதிய நேரம்) |
| இடம் | : 'அகவொளி' குடும்ப வளத்துணை நிலையம், 131, பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம். |

அனைவரும் வந்து பயன் பெறுக! (79337)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.10.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.